2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12 ம் நாள் PW1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 12.02.2026

**Pw1 (நிர்மலா)**

**குறுக்கு விசாரணை ( 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில்)**

தாவா சொத்து எவ்வாறு வழி வழியாக வந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ஒரு அப்புச்சி கவுண்டருக்கு பொங்கியா கவுண்டர் மற்றும் மாரப்ப கவுண்டர் என்ற இரு மகன்கள் என்றால் சரிதான். பொங்கியா கவுண்டருக்கு நடராஜ், ராமலிங்கம், அப்பிச்சி கவுண்டர், ரத்தினம் என்ற 4 மகன்கள் என்றால் சரிதான். பொங்கியாகவுண்டர் , நடராஜ், அப்புச்சி கவுண்டர், ராமலிங்கம் ஆகியோர் என் தாத்தா அப்பிச்சி கவுண்டருக்கும் பொங்கியண்ண கவுண்டர் மகன் ரத்தினத்திற்கும் கிரயம் கொடுத்துள்ளனர் என்றால் சரிதான். தாவா சொத்தின் புதிய புல எண் 55/1 முதல் 8 ம், பழைய கச 306/3 என்றால் சரிதான். பழைய கச வின்அடிப்படையில் சொத்தின் விஸ்தீரணம் ஏக்கர் 5.93 என்றால் சரிதான். ஒவ்வொரு புல எண்ணிற்கும் புதிய ரீச அடிப்படையில் எவ்வளவு வீ ஸ்தீரணம் என காட்டவில்லை என்றால் சரியல்ல. புதிய புல எண் படி மேற்படி சொத்தின் விஸ்தீரணம் எக்டேர் 2.23.5 க்குபு.ஏ 5.52 தான் பூமியில் உள்ளது என்றால் சரியல்ல. புதிய புல எண் அடிப்படையில் நான் பாகம் பிரித்து தர போகிறேன். புதிய ரீச அடிப்படையில் நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் விஸ்தீரணத்தில் பொங்கியண்ண கவுண்டருக்கு சரிபாதியும் மாரப்ப கவுண்டருக்கு சரி பாதியும் பாத்தியம் என்றால் சரிதான். பழைய புல எண் அடிப்படையில் சரிபாதி விஸ்தீரணம் 2.96-1/2 என்றால் சரிதான். பொங்கியா கவுண்டருக்கும் அவரின் நான்கு மக்களுக்கும் ஏக்கர் 2.96-1/2 யில் 1/5 பாகம் என்றால சரிதான். 1/5 பாகம் என கணக்கிட்டால் ஒரு நபருக்கு 59 சென்ட் வரும் என்றால் அது பற்றி என்னால் சொல்ல இயலாது. என் தாத்தா மற்றும் ரத்தினம் 1958

ல் ஏக்கர் 1.95-1/2 கிரயம பெற்றுள்ளனர் என்றால் சரிதான். 1958 ல் விற்பனை செய்தவர்களுக்கு விற்பனை செய்தது நீங்கலாக மீதம் 40-1/2 சென்ட் பாகம் உள்ளது என்றால் சரியல்ல. நான் பொங்கியண்ண கவுண்டரின் வாரிசுகளில் ஒரு மகனான ரத்தினத்தின் வாரிசுகளை மட்டும் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றும், நடராஜ், ராமலிங்கம் , அப்பிச்சி கவுண்டரின் வாரிசுகளை சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அவர்களை நான் வழக்கில் சேர்க்கவில்லை என்றால சரி. அவர்கள் வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் என்றும் அவர்களை சேர்க்காததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. என் தாத்தா அப்பிச்சி கவுண்டர் தந்தை பெயர் மாரப்ப கவுண்டர். மாரப்ப கவுண்டருக்கு அப்புச்சி கவுண்டர் மற்றும் ராக்கியா கவுண்டர் என்ற இரு ஆண் வாரிசுகள்தான். அவருக்கு பெண் வாரிசுகள் இல்லை, நான் தவறாக சொல்கிறேன் என்றும் மாரப்ப கவுண்டருக்கு மாராயி, பாவாயி, பாப்பாத்தி என்ற 3 பெண் வாரிசுகள் உள்ளனர் என்றால் சரியல்ல. மாராயி மற்றும் பாவாயி இருவரையும் ஒரு குருசாமி என்பவர் திருமணம் செய்து கொண்டுள்ளார் என்றால் சரியல்ல. மாராயிக்கும் குருசாமிக்கும் பிறந்தவர்கள் சங்கரம்மாள், சுப்பிரமணி என்றால் சரியல்ல. சங்கரம்மாளின் மகன் தான் இந்த வழக்கின் 5ம் பிரதிவாதி சக்திவேல் என்றால் சரியல்ல. சுப்பிரமணியின் மகன் மற்றும் மகள் வழக்கின் 6 மற்றும் 7 பிரதிவாதிகள் என்றால் சரியல்ல. குருசாமிக்கு பாவாயி மூலம் பிறந்தவர்கள் சொர்ணம்பாள், முத்துசாமி மற்றும் அம்மாசை குட்டி என்றால் சரியல்ல. சொர்ணாம்பாளின் மகன்தான் வழக்கின் 8ம் பிரதிவாதி என்றால் சரியல்ல. முத்துசாமியின் மகள் தான் வழக்கின் 12ம் பிரதிவாதி மாலதி என்றால் சரியல்ல. அம்மாசை குட்டியின் மக்கள் தான் 9 மற்றும் 10ம் பிரதிவாதி என்றால் சரியல்ல. மாரப்ப கவுண்டரின் கடைசி மகள் பாப்பாத்தியின் மகன் சத்தியமூர்த்தி தான் வழககின் 11ம் பிரதிவாதி என்றால் சரியல்ல. இந்த வழக்கில் மேற்படி நபர்களை பிரதிவாதிகளாக ஏன் சேர்த்தேன் என சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி நபர்களுக்கு சொத்தில் உரிமை இல்லை என நான் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொத்தை அபகறிக்க பெண் வாரிசுகள் இருப்பதாக நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. பிரதிவாதிகள் அனைவரும் மாரப்ப கவுண்டரின் உண்மையான வாரிசுகள்

என்பதால் தான் நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. பெண் வாரிசுகளுக்கு சொத்துககள் செல்லக் கூடாது என்பதற்காக மாரப்ப கவுண்டருக்கு பெண் வாரிசுகள் இல்லை என கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் தாத்தா மாரப்ப கவுண்டர் அப்பிச்சி கவுண்டர், ராக்கியா கவுண்டர் பாகப்பிரிவினை எதுவும் செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். மாராயி, பாவாயி , பாப்பாத்தி ஆகியோருக்கு தாவா சொத்தில் 3/8 பாகம் பாத்தியம் எ ன்றால் சரியல்ல. 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கு 1/8 பாகமும், 8 ,10,12 பிரதிவாதிகளுக்கு 1/8 பாகமும் 11ம் பிரதிவாதிக்கு 1/8 பாகமும் பாத்தியம் என்றால் சரியல்ல. மாரப்ப கவுண்டருக்கு தாவா சொத்துக்கள் அல்லாது வேறு சொத்துக்கள் உள்ளது என்றால் அந்த சொத்துக்களுக்கு பாகம் ஏற்பட்டுவிட்டது, அது தொடர்பாக நான் பாகப்பிரிவினை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மற்ற சொத்துக்களை பொறுத்து பாகம் ஏற்படவில்லை என்றும் அந்த சொத்துக்களை இந்த வழககில் சேர்க்கவில்லை என்றும் தாவா சொத்துக்களை பொறுத்து மட்டும பெண் வாரிசுகள் உள்ளதை தவிர்த்து பாகம் கோரி இந்த வழகக்கு தாக்கல் செய்துவிட்டு மிதமுள்ள சொத்துககளை இந்த தீர்ப்பின் அடிப்படையில் பெண் வாரிசுகளை தவிர்த்து பாகம் செய்து கொள்ள வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மற்ற சொத்துககள் ரீச்ர்வே 52,57,66,96 ஆகிய காலைகளில் இதே கிராமத்தில் பூர்வீகமாக உள்ளது என்றால் சரிதான். அந்த சொத்துக்களில் எனக்கு பாகம் உள்ளதா என்றால் உள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் பட்டா எண் 476, 425, 1644, 255, 553, 640, 1645, 477,4, 1827, 1828, 1816, 833, 887, 905, 1794 ஆகிய பட்டாக்களில் உள்ள சொத்துக்களில் எனக்கு பாகம் உள்ளது என்றால் சரிதான். அதிலுள்ள சொத்துக்கள் அனைத்தும பூர்வீகசொத்துக்கள் என்றால் சரிதான். அந்த பட்டாக்கள் பிசாஆ 1 முதல் 16 என்றால் சரிதான். மேற்படி பட்டாவில் கண்டுள்ள சொத்துக்களை வழக்கில் சேர்க்காமல் தாக்கல் செய்துள்ள இந்த வழகக்கு பகுதி பாகப்பிரிவினை கோட்பாட்டின் அடிப்படையில் நிலைக்கதத்க்கதல்ல என்றால் சரியல்ல. மாரப்ப கவுண்டரின் இறப்பு சான்று மற்றும் வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதபோல் வாரிசு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் வாரிசு சான்று தாக்கல் செய்தால் மாரப்ப கவுண்டருக்கு பெண் வாரிசுகள் உள்ளனர்

என்ற விவரம் தெரிந்து விடும் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அவர்களது பாகத்தை பிரித்துக் கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. பெண் வாரிசுகள் இருப்பதாக எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின் அதனை மறுத்து நான் பதிலுரை எதுவும் தாக்கல் செய்யவில்லை. ராக்கியாகவுண்டர் என் தாத்தா ராக்கியாகவுண்டருக்கு ஏற்படுத்திக் கொடுத்தாக சொல்லும் ஆவணம் போலியானது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பட்டா கூட்டு பட்டாவாக தான் தாக்கல் செய்துள்ளேன் என்றும்அதிலுள்ள தரப்பினர்களை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பட்டாவில் ரீச 52,57,96 காட்டடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கு அதில் பாத்தியம் என்பதால் தான் அதில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் முன்னிலைபடுத்தியுள்ள ஆவணம் என் வழக்கிற்கு விரோமாக உள்ளது என்றால் சரியல்ல. 5 முதல் 12 பிரதிவாதிகளின் பாகத்தை மறைப்பதற்காக தான் இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பல்வேறு குறைபாடுகளுடன் உள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(4 முதல் 12 பிரதிவாதிகள் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது)

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.02.12 18:30:15 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS